Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :K.Sekar |
| Father's Name | :V.Krishnan |
| Village | :Vellore |
| Taluk | :Vellore |
| Caste | :SC |
| Calling | :Govt. Bus Driver |
| Religion | :Hindu |
| Age | :59 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.04.2026.

MCOP.No.25/2025 RW1 Name:**சேகர்**

**முதல் விசாரணை**

என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் நான் கிருஷ்ணகிரியிலிருந்து வாணியம்பாடி நோக்கி பேருந்தை ஓட்டி வந்தேன். விபத்து நடந்த சமயத்தில் விபத்தில் இறந்த நபர் எனக்கு எதிர் திசையில் வந்தார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தார். அதற்கு முரண்பட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து தொடர்பான புகாரை

காவல்நிலையத்தில் நான்தான் கொடுத்தேன். அதில் விபத்து நடந்த சாலையில் அதே திசையில் முன்னால் TVS சென்றுள்ளதாக கூறியுள்ளேன். விபத்து காரணமாக அடிப்பட்டவருக்கு அதிக காயம் ஏற்பட்டது. அவர் 108 ஆம்புலன்ஸில் ஏற்றி செல்லபட்டார். சுமார் 5 நாட்கள் கழித்து அவர் இறந்துவிட்டார் என்பதை கேள்விபட்டு தெரிந்துக்கொண்டேன். காவல்நிலையத்தில் விபத்து குறித்து பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் என்னுடைய பேருந்தின் இடதுபுறம் சேதாரம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதால் மேற்படி சேதாரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த சாலை ஒரே நேரத்தில் நான்கு வாகனங்கள் செல்லகூடிய அகலமான சாலை ஆகும். விபத்திற்கு நான்தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. மிதமான வேகத்தில் நான் பேருந்தை ஓட்டியிருந்தால் விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 01/04/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.01 15:34:48 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.